பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 18 செவ்வாய்க்கிழமை (03-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 204

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

அர்ச்சனா ஜுவலர்ஸ்

118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்:

[கி-212 7]

## பட்டப்பகலில் திருட்டு முயற்சி குடும்பப் பெண் குத்திக் கொலை

### கொக்குவிலில் திகில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் வீட்டினுள் புகுந்த திருடன் குடும்பப் பெண்ணை கத்தியால் குத்திக் கொலை செய்துவிட்டு, அவரது நகைகளை அபகரித்த சம்பவம் நேற்று கொக்குவில் பகுதியில் இடம் பெற்றது.

நேற்றுப் பிற்பகல் 1 30 மணியளவில் கொக்குவில் கோவில் வீதி-இராமகிருஷ்ண வித்தியாலய பாடசாலைக்கருகில் இச்சம்பவம் இடம் பெற்றது.

சம்பவத்தில் டாக்டர் சிவராஜாவின் மனைவி கனக சவுந்தரி(வயது-53) என்ற குடும்பப் பெண்ணே கொலை செய்யப்பட்டவராவர். (8ம் பக்கம் (பார்க்க)

## உரும்பிராய் பகுதியில் புலிகள்-படையினர் மோதல்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உரும்பிராய் மூன்று கோவிலடிப்பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று இரவு 8 45 மணியளவில் இடம்பெற்ற இம் மோதல் சம்பவத்தின் போது ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

இதேவேளை சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கருகாமையில் உள்ள வீடுகள் இராணுவத்தினரால் திடீர் சோதனைக் குட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் கொக்குவில் பொற்பதி வீதியில் கிரனேற் வீச்சுச்சம்பவமொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## புலிகளின் நிலைகள் மீது தொடரும்

# அரசின் விமான பீரங்கித் தாக்குதல்

# சமாதான முயற்சியை பாதிக்கும்!

## புலிகளின் வன்னி தலைமையகம் அறிக்கை

(வவுனியா)

**பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தமிழர் தாயகத்தில் போர் நிலைமையை தீவிரப்படுத்துமானால், அதனால் ஏற்படக் கூடிய பாதக விளைவுகளுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.**

**யாழ்ப்பாணத்திலும் பூநகரியிலும் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது சிறிலங்கா அரசாங்கம் விமான, பீரங்கித் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருப்பது சமாதான முயற்சிகளை நிரந்தரமாகப் பாதிக்கும் என தமிழீழ விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளனர்.**

இவ்வாறு நேற்று வன்னியிலுள்ள புலிகளின தலைமைச் செயலகத்திலிருந்து வெளியாகியுள்ள அதிகார பூர்வமான அறிக்கையிலேயே இந்தஎச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த இரு நாட்களாக நடைபெற்று வரும் இக் கடுமையான விமானத் தாக்குதல்களை 'ஆத்திர மூட்டும் ஆக்கிரமிப்பு நடவடிக்கை' (8ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி -பேரியல் இன்று சந்தித்துப் பேசுவர்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுவைச் சேர்ந்த பேரியல் அஷ்ரப்பும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் இன்றுகாலை ஜனாதிபதி மாளிகையில் சந்திக்கவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது அவசரகால நீடிப்பு பிரேரணை நம்பிக்கையில்லாத் தீர்மானம், தொடர்பான விடயங்கள் குறித்து இருவரும் விரிவாகப் பேசவுள்ளனர்.

இச்சந்திப்பிற்குப் பின்னரே அமைச்சர் பதவியை பேரியல் ஏற்றுக்கொள்வது பற்றித் தீர்மானிக்கப்படுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் மருதூர்க்கனி தெரிவித்துள்ளார். (வ)

## சுயாதீன ஆணைக்குழு குறித்து ஜனாதிபதி-ஜே.வி.பி முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

ஐந்துசுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்காவுக்கும் ஜே'வி. பியின் முக்கியஸ்தர்களுக்குமிடையே பேச்சுக்கள் நடைபெற்றுள்ளது.

அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்து ஆட்சியை தொடர்ந்தும் தக்கவைக்க ஜே'வி.பியின் ஆதரவைப் பெறும் நோக்கிலேயே சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைப்பதுதொடர்பாக ஜே. வி.பியினருக்கும் ஜனாதிபதிக்குமிடையேவிரிவானபேச்சுக்கள் இடப்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை அமைச்சர் பேராசிரியர்ஜி எல் பீரிஸ் ஜே வி.பியின் முக்கிய தலைவர்களுடன் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைப்பது தொடர்பாக பேசியிருந்தார். அதன் அடுத்தகட்டப்பேச்சுவார்த்தை யாகவே ஜனாதிபதிக்கும்ஜே. வி.பி தலைவர்களுக்குமிடையே மீண்டும்பேச்சுக் (8ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு ஆதரவு தெரிவித்து பொ.ஐ.மு. தொழிற்சங்கங்கள் நாளை ஆர்ப்பாட்டம்

[கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுக்கு ஆதரவாக நாளை புதன்கிழமை மாபெரும்ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு அரசாங்க தொழிற்சங்க கூட்டமைப்பு ஏற்பாடுசெய்துள்ளது.

இந்தஆர்ப்பாட்டம் தொடர்பான ஆலோசனைக்குழுக் கூட்டம் நேற்று அமைச்சர் அலவிமௌலானா தலைமையில் நடைபெற்றது.

கொழும்புசுற்றுவட்டத்தில் நடைபெறவுள்ள இந்தஆர்ப்பாட்டத்தில் அரசாங்கத்தின் தொழிற்சங்கங்கள் பெருமளவில் கலந்து கொள்ளவுள்ளன.

இந்த ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் ஜெனரல்அனுருத் (8ம் பக்கம பார்க்க)

## படகில் வீழ்ந்து வெடித்த ஷெல்லால் இளம் மீனவர் தலை துண்டித்து பலி

### குருநகர் கடலில் நேற்று சம்பவம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை, படகினில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால், தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் தலை துண்டிக்கபபட்ட நிலையில், துடிதுடித்துப் பலியானார்.

படகிலிருந்த ஏனைய மூவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் குருநகர் பீச் றோட்டைச் சேர்ந்த பிரான்சிஸ் சேவியர் (வயது 22) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். இவருடன் படகிலிருந்தவர்களான அதே இடத்தைச்சேர்ந்த ஜேக்கப் கீதா பொன்கலன் (வயது 39), ஜேக்கப் ஆனந்தராசா (வயது 25) ஆகிய சகோதரர்கள் இருவர் உட்பட அஸ்ரன் சுமன் (வயது 21) ஆகிய மூவருமே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் (8ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில் 6ந் திகதி பூரண ஹர்த்தால் ஏற்பாடுகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினர் தமிழ்ப் பெண்களை விசாரணைக்காக அழைத்துச் சென்றுபாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தும்மிருகத்தனமான செயலைக் கண்டித்து இம் மாதம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். குடாநாட்டில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு பத்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இப்பூரண ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்துவதற்கு பலவேறு பொது அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள்யாழ். பல்கலைக்கழக சமூகம் வர்த்தக சங்கங்கள் ஆகியவற்றின் ஆதரவைப் பெறுவதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக பத்து தமிழ்க் கட்சிகளின்கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## வி. உபகரணங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவன உதவியுடன் செயலகததினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கென வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் நாளை உரியவர்களிடம் கையளிக்கப் படவுள்ளன.

இவை தென்மராட்சி கல்வி வலயம் தவிர்ந்த ஏனைய கல்வி வலயப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட விருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-10)

## கசிப்பு வேட்டை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராச்சந்தியில் அண்மையில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் கசிப்பு வேட்டையினால் அவ் விற்பனையில் ஈடுபட்டிருந்த ஒரு பெண் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இப்பகுதிக்கு வந்த பொலிஸார் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்களை கைது செய்ததுடன் அதனைப் பருகிக் கொண்டிருந்தவர்களையும் நையப்புடைத்தனர்.

(இ)

## உடைகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுதது வைக்கப்பட்டிருக்கும் 50 இந்திய மீனவர்களுக்கும் அண்மையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் உடைகளை வழங்கியுள்ளனர்.

[உ]

## பொதுக் கூட்டம்

(கல்வயல்)

வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி படிப்பகத்தின் 26 வது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4. மணிக்கு தலைவர் இ. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ-111)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூன் மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகிறது.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 161182 ஏ | 161182 பி |
| 161182 சி | 168444 ஏ |
| 177758 ஏ | 177758 பி |
| 177758 சி | 177758 டி |
| 177758 ஈ | 177758எப் |
| 181754 ஏ | 183320 ஏ |
| 183320 பி | 184554 ஏ |
| 184554 பி | 184554 சி |
| 184554 டி | 185865 ஏ |
| 185868 ஏ | 185868 பி |
| 186283 ஏ | 186283 பி |
| 186283 சி | 189176 ஏ |
| 189189 ஏ | 189189 பி |
| 189297 ஏ | 189297 பி |
| 189297 சி | 189618 ஏ |
| 189696 ஏ | 189696 பி |
| 190001 ஏ | 190902 ஏ |
| 190902 பி | 190902 சி |
| 191014 ஏ | 191014 பி |
| 191126 ஏ | 191193 ஏ |
| 191193 பி | 191967 ஏ |
| 191967 பி | 191967 சி |
| 191967 டி | 192999 ஏ |
| 193032 ஏ | 193032 பி |
| 193035 ஏ | 193067 ஏ |
| 193076 ஏ | 193081 ஏ |
| 193142 ஏ | 193206 ஏ |
| 193206 பி | 193216 பி |
| 193261 ஏ | 193261 ஏ |
| 193269 ஏ | 193289 ஏ |
| 193297 ஏ | 193323 ஏ |
| 193326 ஏ | 193340 ஏ |
| 193340 பி | 193359 ஏ |
| 193359 பி | 193359 சி |
| 193359 டி | 193380 ஏ |
| 193419 ஏ | 193428 ஏ |
| 193428 பி | 193428 சி |
| 193433 ஏ | 193433 பி |
| 193457 ஏ | 193457 பி |
| 193470 ஏ | 193470 பி |
| 193470 சி | 193478 ஏ |
| 193478 பி | 193478 சி |
| 193478 டி | 193478 ஈ |
| 194224 ஏ | 194224 பி |
| 194224 சி | 195151 ஏ |
| 195180 ஏ | 195182 ஏ |
| 195183 ஏ | 195183 பி |
| 195189 ஏ | 195189 பி |
| 195189 சி | 195198 ஏ |
| 195211 ஏ | 195222 ஏ |
| 195222 பி | 195226 ஏ |
| 1952-6 பி | 195226 சி |
| 195226 டி | 195226 ஈ |
| 195239 ஏ | 190247 ஏ |
| 195256 ஏ | 195257 ஏ |
| 19-275 ஏ | 195279 ஏ |
| 195279 பி | 195279 சி |
| 195279 டி | 195282 ஏ |
| 195283 ஏ | 195286 பி |
| 195287 ஏ | 195287 பி |
| 195291 ஏ | 195292 ஏ |
| 195300 ஏ | 195300 பி |
| 195301 ஏ | 195302 ஏ |
| 195303 ஏ | 194310 ஏ |
| 195310 பி | 195321 ஏ |
| 195323 ஏ | 195335 ஏ |
| 195335 பி | 195335 சி |
| 195335 டி | 195354 ஏ |
| 195354 பி | 195358 ஏ |
| 195358 பி | 195361 ஏ |
| 195361 பி | 195370 ஏ |
| 195394 ஏ | 195394 பி |
| 191398 ஏ | 195398 பி |
| 195419 ஏ | 195437 ஏ |
| 195437 பி | 195439 ஏ |
| 196439 பி | 19 463 ஏ |
| 195477 ஏ | 195495 ஏ |
| 195500 ஏ | 195506 ஏ |
| 195510 ஏ | 195525 ஏ |
| 195525 பி | 195535 ஏ |
| 195552 ஏ | 195567 ஏ |
| 195593 ஏ | 195714 ஏ |
| 195716 ஏ | 195716 பி |
| 195716 சி | 195745 ஏ |
| 196219 ஏ | 196226 ஏ |
| 196226 பி | 196226 சி |
| 197219 பி | 198009 ஏ |
| 199646 ஏ | 199646 பி |
| 199646 சி | 199646 டி |

### கோப்பாய்

| | |
|---|---|
| 195316 ஏ | 195316 பி |
| 197212 ஏ | 197212 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 183268 ஏ | 184588 ஏ |
| 189686 ஏ | 191160 ஏ |
| 193042 ஏ | 193042 பி |
| 193042 சி | 193129 ஏ |
| 193451 ஏ | 193456 ஏ |

(நாளை தொடரும்)

# மரம் வெட்டியவர் மின்சாரம் தாக்கி மரணம்

(மந்திகை)

மின்கம்பத்திற்கு அண்மையிலிருந்த மரத்தை வெட்டிய போது அதன் கொப்பு உயர் வலுக் கொண்ட மின் கம்பிகளுடன் முட்டியதில் ஏற்பட்ட மின் ஒழுகினால் ஒருவர் பரிதாபமாக மரணமானார்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இச் சம்பவத்தில் கொக்குவிலைச் சேர்ந்ததம்பு பாலசிங்கம் [வயது 60] என்பவரே மரணமானவராவார்.

இறந்தவரின் உடல் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

[உ-23]


## கந்தர்மடம்- அரசடி வீதி அருள் மிகு நாகபூசணி அம்பாள் திருக்கோவில்

## அலங்காரத்திருவிழா

04.07.2001 புதன் பகல் 11.00 மணிக்கு: தேர்த் திருவிழா 05.07.2001 வியாழன் காலை 8.00 மணிக்கு: 108 சங்காபிஷேகம் நடைபெற்று தீர்த்த திருவிழாவும் நடைபெறும் 06.7.2001 வெள்ளி மாலை 4.00 மணிக்கு: வைரவர் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழா உபயகாரர்கள்,
அம்பாள் அடியார்கள்,
ஆலய தர்மகர்த்தா.

(3298)


## குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பகுதியில் கடந்த 30 ஆம் திகதி படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஒரு ஆட்லறிக் குண்டும் 4 கண்ணி வெடிகளும் கண்டெடுக்கப்பட்டதாகவும் பின்னர் அவை செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(உ-9)

## ஆயர் தினம் இன்று

(இணுக்குளி)

யாழ் ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தினம் இன்று கொண்டாடப் படவுள்ளது.

இதனை யொட்டி இன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண பாடசாலைகளின் கத்தோலிக்க ஆசிரியர்கள் மாணவர்களுக்கான விசேட திருப்பலி யாழ். புனிதமரியன்னை தேவாலயத்தில் இடம் பெறவுள்ளது.

(உ-7)

## மாணவன் காயம்

பாடசாலையில் விளையாடிக் கொண்டிருந்த வேளை கதவுநிலை தவறி வீழ்ந்ததில் பாடசாலை மாணவன் ஒருவன் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான.

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற சம்பவத்தில் இரண்டாம் ஆண்டு மாணவன் புஷ்பராசா ரஜ்தமார் [வயது 8] என்பவரே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

[உ-23]

# மே-யூன் மாதங்களுக்கான நிவாரண அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகப் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ளவர்களுக்கான மே, யூன் மாதங்களுக்கான நிவாரண அனுமதிப்பத்திரம் யாழ் பிரதேச செயலகத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கடந்தகாலங்களில் அவர்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள பகுதிகளில்வைத்தே அப்பத்திரம் வழங்கப்பட்டு வந்ததாகவும் மே, யூன் மாதங்களுக்குரிய நிவாரண அனுமதிப்பத்திரமே யாழ் பிரதேச செயலகத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இன்னும் தங்களின் சொந்த இடங்களுக்குத் திரும்பாது இடம்பெயர்ந்து தங்கியுள்ளதாகவும் இவ்வாறு தங்கியிருப்பவர்கள் உடன் இந்த நிவாரண அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளுமாறும் பிரதேச செயலகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதிகளிலே கூடுதலான மக்கள் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10)

## விசாரணை

(கொழும்பு)

'பென்ஸ்' ரக வாகனமொன்றை 7 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்தமை தொடர்பாக விமானப் படைத் தளபதி ஜயலத்வீரக் கொடி லஞ்ச ஊழல்களை விசாரிக்கும் நிரந்தர ஆணைக்குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

(உ)

## இடம் மாற்றம்

(மந்திகை)

நெல்லியடி, கொடிகாமம் வீதியில் இயங்கி வந்த சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் கடந்த 27 ஆம் திகதி முதல் இலட்சுமித் தியேட்டர் ஒழுங்கையிலுள்ள வீடு ஒன்றுக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

[உ-23]

## சேவை நலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலய முன்னாள் அதிபர் ஏரம்பமூர்த்தியின் சேவைநலன் பாராட்டு விழா, நாளைபுதன் கிழமை முற்பகல் 11.00 மணிபளவில் மேற்படி வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தற்போதைய அதிபர் பொ. கணேஸ்வரலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ள வைபவத்தில் கல்விசார் நிபுணர் பலரும் கலந்து கொள்வர்.

(க)

## இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

முகமாலைப் பகுதியில் கடந்த 29 ஆம் திகதி இராணுவத்தினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் இரண்டு விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலியாகியிருப்பதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-9)

## தபால் அட்டைக்கு தட்டுப்பாடு

(கல்வயல்)

யாழ். குடாநாட்டிலுள்ள தபால் அலுவலகங்கள் உபதபாலகங்கள் ஆகியவற்றில் தபால் அட்டைக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவருகிறது.

(உ-111)

## சமூகக் கல்வி பொது அறிவு போட்டி

[மந்திகை]

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான சமூகக்கல்வி பாட பொது அறிவு[illegible] போட்டி எதிர் வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 1.00 மணிக்கு நெல்லியம் மத்திய மகாவித்தியாலயம், இணுவில் மத்திய கல்லூரி ஆகியவற்றில் நடைபெறவுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தத்தமது பகுதிகளிலுள்ள நிலையங்களுக்குச் சென்று கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர். வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

[உ-23]

# இராசி பலன்

3-7-2001

(ஆனி 19, செவ்வாய்)

திரயோதசி மு. இ. 7-28 வரை[illegible]

அனுசம் மு. ப. 6-29 வரை

ராகுகாலம்- 2-57 — 4-27

நல்ல நேரம்; 10-27—11-57

பிரதோஷ விரதம்

**மேடம்**
எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், பிரயாண பயம், விபாதிரு

**இடபம்**
திடீர் பயணம், முயற்சி ஜெயம், சுவாரஸ்யம், நண்பர்கள் சந்திப்பு.

**மிதுனம்**
தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி, காரிய நன்மை, ஆரோக்கியம்.

**கடகம்**
புத்திரரால் கவலை, வியாபார மேன்மை, முயற்சி தாமதம், போசன சுகம்.

**சிங்கம்**
மனம் சஞ்சலம், கல்வி மேன்மை, விரும்பாதோர் தொடர்பு, உறவினர் மனஸ்தாபம்.

**கன்னி**
அன்னியர் சந்திப்பு, வாக்கு பலிதம், இனிய சம்பவம், காரியம் கைகூடும்.

**துலாம்**
தன விரயம், வாக்குக் கலகம், முயற்சி தாமதம், கௌரவக்குறைவு.

**விருச்சிகம்**
ஜனவசியம், தேகசுகம், நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை.

**தனுசு**
சயன சுகக்குறைவு, வீண் அலைச்சல், சுபசெலவு, மனஸ்தாபம்.

**மகரம்**
கீர்த்தி, தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, கடின உழைப்பு.

**கும்பம்**
உற்சாகம், தொழில் மேன்மை, அதிகாரம், நல்ல சம்பவம்.

**மீனம்**
புதிய திட்டமிடல் காரிய தாமதம், உடல் சோர்வு' கட்டுப்பாடு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

• வளவன்.

# குழந்தை உளவியல் நூல்கள் தமிழில் இல்லையேஎன்றதுறையைப் போக்கியவர் சபா ஜெயராசா

## பேராசிரியர் சிவசந்திரன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

குழந்தைகளுக்கான உளவியல் நூல்கள் பலவும் ஆங்கில மொழியிலேயே காணப்படுகின்றன.

தமிழ் மொழியிலும் அவை ஆக்கப்பட வேண்டியதன் அவசியத்தேவையை உணர்ந்து செயற்பட்ட பேராசிரியர் சபா ஜெயராசா பாராட்டத்தக்கவர்.

அண்மையில் சபா ஜெயராசாவினால் எழுதப்பட்ட "குழந்தை உளவியல் நூல்" வெளியீட்டு விழா யுனிசெவ் நிறுவன ஆதரவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது

யாழ். மாநகர ஆணையாளர் இ. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கலந்து கொண்டு நூலின் மதிப்புரையினை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக புவியியற் றுறைத் தலைவர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

ஒரு குழந்தையின் உள வளர்ச்சியில் 5 வயது வரையான காலம் முக்கிய பங்கு வகிக்கிறது

இந்தக்காலத்தில் அவர் தம் அறிவை மேம்படுத்த வேண்டும்.

குழந்தைகள் உளம் பாதிப்படையாவண்ணம் பெரியவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார்;

யூனிசெவ் நிறுவன திட்டமிடல் உத்தியோகத்தர் செல்வி எல்லியோநோறா ராஸ்கோ, மாநகர முதல்வர் என். ரவிராஜ், பிரதி முதல்வர் செ. கந்தையன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

(உ-6)

## அதிபர்கள் கூட்டம்

(மந்திகை)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 6.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

(உ-23)

## பால்மா அருந்தியதால் பாதிப்புக்குள்ளான குழந்தைகள் விபரம்

[மந்திகை]

நிவாரணத்திற்கு வழங்கிய ரத்தி பல்மாவினை உட்கொண்டு குழந்தைகளுக்குப் பாலூட்டியமையால் பாதிக்கப்பட்ட மேலும் நான்கு குழந்தைகள் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நான்கு குழந்தைகளினதும் விபரங்கள் வருமாறு,

ஜெகநாதன் றோசன் [வயது 4] மாதா கோவில் நலன்புரி நிலையம்.

நாகேஸ்வரன் சர்மிலன் [வயது3] சிங்க நகர் நலன்புரி நிலையம், அன்னசுதன் ரஞ்சி கொற்றாவத்தை, தணிகாசலம் சாம்பவி நெல்லியடி கிழக்கு.

[உ-23]

## நெடுந்தீவில் கலை நிகழ்வுகள்

(நெடுந்தீவு)

மனித முன்னேற்ற நடுநிலைய ஆதரவுடன் நெடுந்தீவு மேற்கு வசந்தபுரி சிறுவர் பூங்காவைச் சேர்ந்த சிறுவர்களினால் அண்மையில் கலை நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

சிறுவர்களின் கல்வி, கலையார்வத்தினை வளர்த்தெடுக்கும் நோக்கோடு வசந்தபுரி ஆசிரியர்களும் மனித முன்னேற்ற நடுநிலையத்தினதும் இணைந்தசெயற்பாடு மிகவும் வரவேற்கத் தக்கதுஎன தீவு மக்கள் திருப்தியடைந்துள்ளனர்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக அருட்திரு பொன்பேர்ட் அடிகளாரும் மற்றும் மனித முன்னேற்ற நடுநிலைய இணைபபாளர் எஸ் யோசப்பாலாவும் கலந்து கொண்டனர்.

(க-82)

## பாடசாலை மாணவர்கள் ஈ.பி.டி.பியில் இணைவு

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின்யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட இருவர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் இணைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

நுணாவிலில் இருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாயில் வசித்து வந்த தங்கராசாசரத்பாபு (வயது 16), நுணாவிலில் இருந்து இடம் பெயர்ந்து அரியாலையில் வசித்து வந்த ஸ்ரீஸ்காந்தராசா பிரசாந்தன் (வயது 15) ஆகியோரே இவ்வாறு ஈ.பி.டி.பி அமைப்பில் இணைந்தவர்களாவர்.

மேற்படி இருவரும் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி மாணவர்கள் என்பதும் கடந்தசெவ்வாய் முதல்காணாமல்போயிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-10)

## கண்டனம்

(கொழும்பு)

அவசரகால நீடிப்புப் பிரேரணைக்கு வாக்களிப்பது தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரத்தை நேற்று முன்தினம் கூடிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மத்திய பாராளுமன்றக் குழுவிற்கு வழங்கியுள்ளது.

அத்துடன் ரவூப் ஹக்கீமிற்குபாதுகாப்பு வழங்காமை குறித்து இக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ)

## போரை நிறுத்தி சமாதான முயற்சியைமுன்னெடுக்குக

### மதங்களின் கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

யாழ். குடாநாட்டு மக்களின் போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்று தேசிய ஐக்கியத்துக்கான மதங்களின கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தேசிய ஐக்கியத்துக்கான மதங்களின் கூட்டமைப்பு தனது யாழ். விஜயத்தை யடுத்து. யாழ். குடாநாட்டு மக்களின் நிலைமைகளை வெளிப்படுத்தும் வகையில் சில கோரிக்கைகளை முன்வைத்து அறிக்கையொன்றை வெளியிட்டது. அவ்வறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனர் நிர்மாண நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதுடன், வடகிழக்கு மாகாணசபையை செயற்படுத்த தேர்தலை நடத்துதல் அவசியம்.

அரசியலமைப்பு 13 வது திருத்த சட்டத்துக்கு அமைவாக மாகாணசபைக்கானசட்டத்தை அமுல்செய்வதன் மூலம் தமிழ்மக்களின் பிரச்சினையில் அரைவாசியை தீர்க்க முடியும்.

அத்துடன், இலங்கையில் சமாதானம் ஏற்பட, போரினை உடனடியாக நிறுத்தி சமாதான முயற்சிகளைத் தொடர வேண்டும்.

பொது நலனுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், அரசு, விடுதலைப்புலிகள் மற்றும் கட்சிகள் செயற்பட வேண்டும்.

(இ)

## சிலைநிறுவ ஏற்பாடு

(ஏழாலை)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் அமைந்துள்ள பிரதேசத்தில் அமரர் சு. ஸ்ரீபாஸ்கரனின் சிலை நிறுவப்படவுள்ளது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவருமான அவரது சிரார்த்த தினத்தை முன்னிட்டுஎதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26 ஆம திகதியன்று பொதுமக்களின் பங்களிப்புடன் அமரரின் சிலை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(உ-12)

## இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம்

(மந்திகை)

பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு 3 ஆயிரம ரூபா நிவாரணம் வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணக்கம் தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச இடம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தினர் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து இந்த உறுதி மொழி வழங்கப்பட்டது.

பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து ஏற்கனவே 2 ஆயிரம் ரூபா பெற்ற அனைவருக்கும் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

(உ-23)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம் 13 ஆம் நாள்



## 'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

### நாகபரமேஸ்வரியே ஆடு!

வேம்பாடும் வெளியெல்லாம் தென்றல் ஆடும்
வெளிசூழ்ந்த சமுத்திரத்தில் அலைகள் ஆடும்
தீம்பாலும் அபிஷேக திரவமும் ஆடும்
செழிப்போடுன் சந்நிதியில் சேமம் ஆடும்;
பாம்பாடும் பூவோடு படத்தில் ஆடும்;
பார்வதிநின் பக்தர்களில் பக்தி ஆடும்;
நாம்பாடும் பாடலருள் நயந்து ஆடும்;
நாகபர மேஸ்வரியே! எமக்காய் ஆடு!

நயினைச்சோதி

### பாதம் போற்றுகின்றேன்

உத்தமர் சித்தர்கள் ஞானியர் வானவர்
உணர்விற்கும் எட்டாத புராதனியாய்
கத்தும் திரைகடல் நடுவமர்ந்து அம்பாள்
காட்சி கொண்டருள நயினையிலே!
எத்தனை கோடி தவமிருந்து அவள்பதம்
ஏத்துதற்காய் வந்து பிறந்தேனோ!
அத்தனை கோடி தரம் பணிந்திங்கே
அடியவள் அவள்பதம் போற்றுகின்றேன்;

சிறையுற்ற பட்சி போல் முறையொத்த வாழ்வில்
சிக்குண்டு அடைபட்டு நான் அலைந்தேன்
சிந்தனை நின் தனக்கின்றி இவ்வுலகில்
சிக்குண்டு அடைபட்டுப் பலர் அழிந்தார்
நிறையுற்ற நின்மலர்ப் பாதமென் சென்னியில்
நினைத் தென்றும் நான் சூடுவேன்
நின் அருட்பார்வையில் மும்மலம் நான்கெட
நீயருட்கடலாக வருவாய்

சிவாஜினி மயில்வாகனம்
கம்ணசவித்தியாலயம்

### வழியதைத்தரவல்லதாய்

தேரேறி வருகின்ற நாகாத்தா
தேடுகின்றோம் எங்களுக்கு அருளினைத் தா!
போரேறிப் புரட்டிவிட்ட நித்திலத்தை
பொது நெறியில் நடத்திட உன்கருணையைத்தா!
சீரோடு வாழ்ந்திட்ட தமிழினத்தை
சிறப்புடனே வாழ்விக்கும் வழியினைத்தா!
வேரோடு சாந்து நிற்கு நம்பிக்கையை
வென்றெடுத்து எங்களுக்கு வெற்றியைத்தா!

சூரியநிலா
க'கு. அங் இல- 15

### தெய்வீகம் காணவாரீர்

ஊழி முதல்வனின் உருவில் கலந்தவள்
புவனம் முழுது முய்ய
ஆழிப் படையானுக்கு அன்புத் தங்கையானவள்
அறனு மன்பும நிலைக்க
கோழிக் கொடியனுக்கு வேல் கொடுத்தவள்
சக்தியின் திறனுணர்த்த
ஆழி சூழ் மணிபல்லவத்தில் அரசோச்சுபவள்
தெய்வீகம் காண்போம் வாரீர்!

நெஞ்சிலே பாரத்தை நெடுநாள் தாங்கி
சும்மாடு சுமந்து மந்தைகளாய்
அஞ்சி உயிர்காக்க அகதியாய் அலைகிறோம்
அருள் வேண்டி அன்னையே
தஞ்சமடைந்து திருத்தாள் பற்றினோம்
நல்லரவு தாலாட்டும்
நஞ்சுண்ட கண்டன் நாயகியே நாகம்மையே
துயர்களைப் போக்கி விடு!

கந்த தியாகராசா
கோண்டாவில்

# அரசியல், மதத் தலைவர்கள் தனிப்பட்ட நலன்களை மறந்து பொது உடன்பாடு காண வேண்டும்

## அமைச்சர் ஜி எல்.பீரிஸ் அழைப்பு

(கொழும்பு)
நாட்டின் இன்றைய நெருக்கடி நிலையில் சகல அரசியற் கட்சிகளின் தலைவர்களும், மதத்தலைவர்களும் ஒரு பொதுக்கருத்து உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்று கண்டி மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்த அமைச்சர் ஜீ எல்.. பீரிஸ் கேட்டுக் கொண்டார்.

எரிந்துகொண்டிருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் விதத்தில் தனிப்பட்ட நலன்களை மறந்து சகலரும் பொது உடன்பாட்டுக்கு வரவேண்டும்.
புத்திஜீவிகள், வர்த்தகர் சமூகம் ஆகியோருக்கும் இதில் முக்கிய பங்குண்டு.

அறநெறிகள் தொகுக்கப்பட வேண்டும், நாட்டிற்கு புதிய கலாசாரம் தேவை. இதற்கு மதபீடங்கள் வழிகாட்டியாக செயற்பட வேண்டும். இதனைத் தாமதிக்கலாகாது. என்றுஅமைச்சர் பீரிஸ் அவர்களிடம் எடுத்துரைத்தார். (உ)

## காணாமற் போனோர் பற்றிய விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டோர்விபரம்

(யாழ்ப்பாணம்)
1996, 97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற் போனோர் சம்பந்தமாக விசாரணையினை மேற்கொண்டு வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர் பின்வரும் காணாமற் போனோர் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்கள், மற்றும் பெற்றோர். சாட்சிகளை யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு சாட்சிகளை வழங்குமாறு அழைத்துள்ளனர்.

★ சரவணை ரேவதி (கோ. இல-பி 1/220) கரம்பைக் குறிச்சி மேற்கு வரணி
★ எஸ். தயாபரன் (கோ. இல.பி 1/137) ஊர்காவற்றுறை
★ சபாரத்தினம் சந்திரகுமார் (கோ.இல.பி 1/480) குமரகோட்டம் கோண்டாவில்
★ மருசலீன் திகேஸ் வேலன்ரைன் (கோ. இல.பி 1/428) உரும்பிராய் கிழக்கு
★ அருளானந்தன் கெங்காதரன் (கோ. இல.பி 1/461) அரசடி வீதி கோப்பாய் தெற்கு
★ ராஜரட்ணம் சிறிதரன் (கோ. இல.பி 1/460) டச்சு வீதி கோப்பாய் தெற்கு
★ நவரட்ணம் யோகேஸ்வரன் (கோ. இல பி 1/408) நவாலி தெற்கு
★ மார்க்கண்டு விஜயகுமார் (கோ. இல.பி 1/410) சிவன் கோவிலடி சங்கானை மேற்கு
★ பாலரத்தினம் ஜெயமோகன் (கோ. இல பி 1/130) 183, ஜின்னா வீதிமானிப்பாய்
★ இராசையா பாலசுப்பிரமணியம் (கோ. இல பி 1/181) சங்கரத்தைவட்டுக்கோட்டை
★ குமாரன் கமலேஸ்வரன் (கோ. இல பி 1/444) வடலியடைப்பு பண்டத்தரிப்பு
★ நமசிவாயம் சமலதீஸ்வரன் [கோ. இல.பி 1/143] அரியாலை கிழக்கு
★ துரைசிங்கம் தேவிராஜா [கோ இல பி 1/390] பழைய பொலிஸ் நிலையம் வீதி ஆனைக்கோட்டை
★ கணேஸ் சருணாகரன் [கோ. இல.பி 1/399] மூளாய்
★ பாலன் சிவராஜ் [கோ. இல பி 1/475] மட்டுவில கிழக்கு
★ கந்தசாமி செந்தீபன் [கோ. இல பி 1/114] மிருசுவில் கிழக்கு
★ சொலமன அருள்நேசன் [கோ. இல பி 1/44] தேவதாசிகுளம் மேரி தேவாலயம் மிருசுவில்
★ வேலு வசந்தன் [கோ. இல.பி 1/353] எழுதுமட்டுவாள் தெற்கு
★ நிர்மலா தர்மபாலன் [கோ. இல.பி 1/387] சாவகச்சேரி
★ ராசு விஜிதரன் (கோ. இல.பி 1/366) எழுதுமட்டுவாள் தெற்கு
★ செபமாலை வில்சன் [கோ இல பி 1/371] மிருசுவில தெற்கு
★ தங்கவேலு சந்திரகுமார் [கோ இல.பி 1/468] தனங்கிளப்பு வீதி சாவகச்சேரி
★ செல்லையா பாலசிங்கம் (கோ.இல.பி 1/440) கைதடி நுணாவில் சாவகச்சேரி
★ ரத்தினம் தேவராசா (கோ இல.பி 1/438) கைதடி சாவகச்சேரி
★ அருளானந்தம் சிவகுமார் (கோ. இல.பி 1/466) நாகர்கோவில் கிழக்கு
★ பி. கணேசலிங்கம் (கோ. இல.பி 1/241) மீசாலை கிழக்கு
★ இளையதம்பி கேசவன் (கோ. இல.பி 1/277) மீசாலை தெற்கு
★ எஸ். குமார் (கோ. இல.பி 1/363) மீசாலை வடக்கு
★ பூபாலசிங்கம் குமார் (கோ. இல.பி 1/359) மட்டுவில தெற்கு

(உ- 10)

## முன்பள்ளி ஆசிரியர் நேர்முகத் தேர்வு இம்மாதம் 11ஆம் திகதி

(புலோலி)
மாகாண உள்ளூராட்சி அமைச்சின் நடவடிக்கைக்கு இணங்க முன்பள்ளி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தியபோட்டிப்பரீட்சையில் யாழ். மாவட்டத்திலிருந்து தோற்றிய 17 முன்பள்ளி ஆசிரியர்கள் 115புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ் பிராந்திய உள்ளூராட்சி திணைக்களத்தில நடைபெறவுள்ளது.

நேர்முகபரீட்சையை நடத்த வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு கிராம அபிவிருத்தி கைத்தொழில் அமைச்சின் உதவிச் செயலாளர் எஸ். திவாகரன் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இந்நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் ஆசிரியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பரீட்சைக்கான ஆவணங்கள் மற்றும் அவற்றின் புகைப்பட பிரதிகளுடன் நலலூர் செட்டித்தெரு வீதியில உள்ள யாழ். உள்ளூராடசி அலுவலகத்திற்குகாலை 9 30மணிக்கு முன்பு அன்றைய தினம் சமுகமளிக்குமாறுசம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-52)

## புத்தூரில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)
பிரதேச செயலகத்தினால் ஒவ்வொரு மாதமும் முதல் திங்கட்கிழமைகள் அச்சுவேலியில் நடத்தப்பட்டுவந்த நடமாடும் சேவை இம்மாதம் 9 ஆம் திகதி திங்கட்கிழமை புத்தூர் பிரதேச சபை உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக கோப்பாய் பிரதேசசெயலர் சேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எனவே அன்றையதினம், அப்பகுதியைச்சேர்ந்த பொது மக்கள தங்களது பிரச்சினை தொடர்பாக நடமாடும் சேவையில் பங்குபற்றி தீர்வு காணலாம் என்றும் வழமை போல் சம்பந்தப்பட்ட திணைக்களங்களும்அந்நடமாடும் சேவையில் பங்குபற்றி தங்களது திணைக்களம் தொடர்பான சேவைகளை வழங்கும்படி பிரதேசசெயலர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## 15 இலட்சம் நிதி உதவி

(யாழ்ப்பாணம்)
உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் ஆண்கள் பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் தமது பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஈ பி. டி.பியின் யாழ் மாவட்டத் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

அமைச்சர் இப் பாடசாலையின் நூல் நிலையத்தினை நிர்மாணிப்பதற்காகவும், கணனி வசதிகளுக்காகவும் பாடசாலை அபிவிருத்திக்காகவும் 15 இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார். (உ)

## மல்வத்தை பீடாதிபதி ஆலோசனை

(கொழும்பு)
இலங்கையில் 45 ற்கு மேற்பட்ட கட்சிகள் இருக்கின்றன. தினமும் ஒவ்வொரு அரசியல் கட்சி உருவாகிக் கொண்டு இருக்கிறது.

இந்த நிலைமை நாட்டுக்கு உகந்ததல்ல.

எனவே நீங்கள் ஆட்சி அமைத்தால் இவற்றை இத்தோடு நிறுத்தி, சிறந்த ஆட்சி அமைக்க வேண்டும் என்று அவரிடம் ஆசிபெறச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மல்வத்தை பீடாதிபதி கேட்டுள்ளார். (வ)

## நிதிஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)
தாவடி தெற்கு ஸ்ரீ காளியம்மன் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ரூபா 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். (உ)

## ஆளுங்கட்சி எம்பிக்கள் ஐ.தே.கவில்சேரமாட்டார்கள் பௌஸி நம்பிக்கை

(கொழும்பு)
பொதுஜனஐக்கியமுன்னணி அரசுமீது ஐக்கியதேசியக்கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினால் அரசுசார்பு பராளுமன்றஉறுப்பினர்எவரும் ஐக்கியதேசியக் கட்சியில் சேரமாட்டார்கள் என போக்குவரத்து அமைச்சர் எம்.எச் எம் பௌஸி தெரிவித்துள்ளார்.

ஹோமகமவில் இடம்பெற்ற வைபவம்ஒன்றில்உரையாற்றிய அமைச்சர் பௌஸி மேலும் தெரிவித்திருப்பதாவது.

அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்படும்.

நாட்டில் சமாதானத்தையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்தவும் ஜனாதிபதி மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் வெற்றிபெறும் என்ற அச்சத்தினால்ஐக்கியதேசியக்கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சமர்ப்பித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் ரோகணவிஜயவீர ஐக்கியதேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் கொல்லப்பட்டதினால் ஜே வி பியின் ஆதரவைக் கோரஐக்கியதேசியக் கட்சிக்கு எந்த உரிமையும்இல்லை.

இதேவேளை பேரியல் அஷ்ரப்பைக் கட்சியிலஇருந்து நீக்குவதற்கு ரவூப்ஹக்கீமிற்கு எந்தவிதமான அருகதையுமில்லை என்றும்அமைச்சர் பௌஸி தெரிவித்துள்ளார். (வ)

## முரண்பாடுகளை தீர்த்தல் செயலமர்வு

(மந்திகை)
தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர், மாணவர்களுக்கான 'முரண்பாடுகளைத் தீர்த்தல்' கருத்தரங்கின் ஆசிரியர்களுக்கான செயலமர்வுஇம்மாதம் 11ஆம் திகதிநெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், 14, 15 ஆம் திகதிகளில் இணுவில் மத்திய கல்லூரியிலும நடைபெறவுள்ளது.

மாணவர்களுக்கான செயலமர்வு 5,7 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்திலும், 22,28ஆம் திகதிகளில் இணுவில் மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (உ-23)

## வைத்தியரிடம் பணம் பறிக்கும் கொள்ளையரின் திட்டம் முறியடிப்பு

(கொழும்பு)
வெலிகம வலவத்தைப் பகுதியில் வைத்தியர் ஒருவரிடம் இருந்து பணம்பறிக்கும் கொள்ளையரின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கொள்ளையர் குழு ஒன்று வைத்தியரிடம் பணம் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை திடீரென பொலிஸாரைக் கண்டதும் பொலிஸார்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனை அடுத்து பொலிஸாருக்கும் கொள்ளையர் குழுவிற்குமிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் இரு கொள்ளைக் காரர்கள் கொல்லப்பட்டதாகவும், ஏனையோர் தப்பியோடிவிட்டதாகவும் கம்பஹா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எச். டபிள்யூ தண்டாபசிங்க தெரிவித்துள்ளார். (உ-5)

## ரயிலில் சென்ற மாணவன் பாலத் தடுப்புடன் தலைமோதிப் பலி

(கொழும்பு)
ராகமையிலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில்பிரயாணம் செய்த தமிழ்மாணவன் பலியாகியுள்ளான்.

ரயில் பாலம் ஒன்றைக் கடந்துகொண்டிருந்தவேளையில் ஜன்னலூடாக வெளியே எட்டிப் பார்த்த மாணவனின் தலை பாலத்தின் இரும்புத் தடுப்புடன்மோதியதாலேயே மரணமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பலியானவர் வவுனியா கோயிற்குளம் இந்துக்கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவனான செல்வசோதி காண்டீபன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## வடபகுதியில் நிகழும் வான் தாக்குதல் குறித்து இந்தியத் தூதர்கண்டனம்

(கொழும்பு)
நீண்ட இடைவெளியின் பின் வடபகுதியில் மீண்டும் விமானத் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது குறித்து, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தி அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

யாழ். குடாநாட்டு நிலைமை குறித்து செய்தியாளர் வினாத்தொடுத்த போது தனது அதிருப்தியை வெளியிட்ட தூதர்,

தனது நிலைப்பாட்டை அரசுக்கு விளக்கியிருப்பதாகவும்,

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும் என்பதில் தாம் உறுதியாக இருப்பதாகவும் தெரிவித்தார். (உ-5)

## முன்கூட்டியே தொடர்பு கொள்க

(மல்லாகம்)
மருதனார் மடத்தில் இயங்கும் விவசாயக் கல்லூரியை பார்வையிடவரும் பாடசாலைகள் முன்கூட்டியே தம்முடன் தொடர்புகொள்ள வேண்டும்என மேற்படி கல்லூரியின் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் அங்கு பெருமளவில் சென்று பார்வையிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-122)

### இன்று ஒரு தகவல்

## கல்லீரலைக் கவனியுங்கள்

ஒரு பஸ் நிலையத்தில் காத்துக் கொண்டிருக்கிறீர்கள்! வழக்கம் போல் பஸ் வருகிறது. கொஞ்சத்தூரம் தள்ளிப் போய் நிறகிறது. நீங்களும் ஓடிப்போய் ஒரே தாவாகத் தாவி படியிலே ஏறிக் கம்பியைப் பிடிக்கிறீர்கள். உடனே ஏதோஒநஒலி மபிக்பந்தையத்தில் வென்றது. மாதிரி ஒரு வெற்றிக் களிப்பு- உங்கள் முகத்தில். இதற்காக நீங்கள் மட்டும் பெருமைப்பட்டுக் கொள்கிறது அவ்வளவு நல்லதாக இல்லை. உங்கள் உடம்புக்குள் இருக்கிற கல்லீரலுக்கும் அதிலே பங்குண்டு.

நீங்கள் பஸ்லஸப் பிடிக்க ஓடுகிற பொழுதுஉங்கள் தசைகளுக்குச் சக்தி தேவைப்படுகிறது அந்த சக்தியைக்கொடுக்கிறதற்கு எரிபொருள் தேவைப்படுகிறது அதற்குக் கல்லீரலுக்குத் தான் விண்ணப்பம் போட வேண்டும். அது சும்மா இருக்கிறதில்லை. 24 மணிநேரமும் கிளைக்கோஜன் என்கிற மாவுச்சத்தைக் கையிருப்பிலே வைத்திருக்கிறது அதிற்கொஞ்சத்தை எடுத்துக் குளுக்கோசாக மாற்றி இரத்தக்குழாய்கள் மூலமாகத்தசைகளுக்கு அனுப்புகிறது. அதனால் தாவிப் பிடித்து பஸ்ஸில் ஏறி விடுகிறீர்கள இல்லையென்றால் முடியுமா? நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருக்க வேண்டியது தான்.

கல்லீரலுக்கு இது மட்டும் தான் வேலை என்று நினைக்காதீர்கள், அது என்னென்ன செய்து கொண்டு இருக்கிறதென்பதை இன்னமும் முழுசாக யாரும் கண்டு பிடிக்கவில்லை. ஒவ்வொரு விநாடியும் கல்லீரல் செய்கிற இரசாயன ஜாலவித்தையை கற்பனை பண்ணிப் பார்க்கிறது கூட கஷ்டமாம். இது வரைக்கும் அது செய்கிற 500 க்கும் மேற்பட்ட வேலைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்களாம். இன்னும் புதிதுபுதிதாக கண்டு பிடித்துக்கொண்டே இருக்கிறார்களாம். காலையில் சாப்பிடுகிறீர்கள். ஆகாரம் வயிற்றுள போகிறது. உடனே கல்லீரலில் பல சிக்கலான இரசாயன வினைத் தொடர்கள் நிகழ ஆரம்பிக்கும்.

கல்லீரலிலிருந்து புறப்பட்டு பித்தநீர், சிறுகுடலுக்கு வருகிறது கொழுப்புகளை ஜீரணம் செய்ய உதவுகிறது. சிறுகுடலில் இருக்கிற என்சைம்கள் கொழுப்பை, கொழுப்பு அமிலமாக மாற்றுகிறது. அவையெல்லாம் கல்லீரலுக்குள் போகிறது. அங்கே உடற்கொழுப்பாக மாற்றப்படுகிறது. அதற்குள் இரப்பையிலும், சிறுகுடலிலும புரதங்கள் அமினோ அமிலங்களாக மாற்றப்படுகிறது. அந்த அமினோ அமிலங்கலள கல்லீரல் பிளாஸ்மா புரதங்களாக மாற்றுகிறது. அவையெல்லாம் உடம்பில் திசுத்தசைகளை உருவாக்கிறதற்குத் தேவை. புரதம் ஜீரணிக்கப்படுகிறபோது அமோனியா என்கிற நச்சுப் பொருள் உண்டாகிறது கல்லீரல் மறுபடியும் தலையிட்டு அமோனியாவை யூரியாவாக மாற்றுகிறது. இந்த யூரியாவைச் சிறுநீரகங்கள்வெளியேற்றிவிடும்.

மனிதன் உட்கொள்ளும் அல்கஹால், நிகோடின், போதை மருந்துகள் போன்ற நச்சுப் பொருட்களைச் சிதைத்து அவற்றினுடையகேடுவிளை விக்கும் தன்மையைக் குறைக்கிறது கல்லீரல் தான் இப்படிக் கல்லீரல்எப்போதும் வேலை செய்து கொண்டிருக்கும். நமது உடம்பிலிருக்கிற சுரப்பிகளிலேயே கல்லீரல் தான் மிகவும் பெரியது. இருதயம் இருக்கிறதே-இது தன்னுடைய சக்தியில் கோற்பங்கைக் கல்லீரலுக்கு இரத்தம் வழங்குவதிலேயே செலவு செய்கிறதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். நுரையீரலுக்கு மட்டும் தான் கல்லீரலை விட அதிக இரத்தம் போகிறது நமது உடம்பில் இரத்தத்தின் அளவு கூடினால் இருதயத்திற்குவேலைச் சுமை அதிசரிக்கும். இரத்தம் செலுத்துகிற இயக்கம்தடைபடுமேயானால் - கல்லீரல் தன்னுடையகொள்ளளவைக் கூட்டிக் கொள்ளும். மேலதிக இரத்தத்தைச் சேமித்துவைத்துக் கொள்ளும். கல்லீரல் மிக முக்கியமான உறுப்பு சேதங்களைத் தானாகவே சரி செய்து கொள்ளும் சில புற்று நோயாளிகளின் உடம்பிலிருந்து 90 சதவீதம் கல்லீரலை அறுத்து எடுத்து இருக்கிறார்கள். ஆனால் ஒரு சில மாதங்களுள் அதுதானாக வளர்ந்துஇயலபான நிலைக்கு வந்து விடுகிறது மிகவும் கடுமையான சேதம் ஏற்பட்டால் தான் கல்லீரல் தனது கோளாறை வெளியே காட்டிக் கொள்ளும். கல்லீரல் கோளாறுகளைக் கண்டுபிடிக்க இப்போது நிறைய வழிமுறைகளிருக்கின்றன. கல்லீரலில் அழற்சி வரலாம், சுருக்கம் வரலாம். எந்தக் கோளாறுக்கும் சிகிச்சைமுறை ஒன்று தான்.

மது அருந்தக் கூடாது முழு ஓய்வு வேண்டும். புரதச் சத்து, விற்றமின் பீ அதிகமாகவுள்ள சத்துணவு சாப்பிடவேண்டும். நல்ல பழக்கவழக்கம். நல்ல ஆகாரம் இருந்தால் எந்த வியாதியும் கிட்டநெருங்காது. கல்லீரலில் கோளாறு இருந்தால் ஆரம்ப அறிகுறிகள் தெளிவில்லாமல் இருக்கும்: தளர்ச்சி களைப்பு மனக் குழப்பம், குமட்டல் இருக்கலாம். நோயாளிகளைப் படுக்க வைத்து நன்றாக மூச்சை இழுத்து விடச்சொல்லி வயிற்றில் அழுத்தி ஈரல் வீங்கியிருக்கிறதா என்பதைப் பார்ப்பார்கள்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# மாணவியைத் தாக்கிய அதிபர் பிணையில் விடுதலை

(புலோலி)

மாணவியைத்தாக்கிய அதிபரை 10ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும்ஆயிரத்து 500 ரூபா காசுப்பிணையிலும் செல்ல பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ் வழக்கு விசாரணை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எஸ் ஏ ஈ· ஏகநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

கல்விச் சுற்றுலாவுக்குச் சென்ற சமயம் கடற்கரையில் வைத்து இந்த அதிபர் 4ஆம் ஆண்டு மாணவியைத் தாக்கியுள்ளார். இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் நடைபெறக்கூடாது. மாணவர்களின் ஒழுக்கத்தை ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கம் என்பன கண்காணித்து நல்வழிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்த நீதவான் மேல் விசாரணையை ஆகஸ்ட் மாதம் 13ஆம்திகதிக்கு ஒத்தி வைத்தார். (உ-52)

# மத்திய வங்கி அதிகாரிகள் மீது உயர்கல்வியமைச்சர் பாய்ச்சல்

## நாட்டை அடகு வைக்கிறார்களாம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள உடன்பாடு நாட்டின் கழுத்தில் மாட்டப்பட்டிருக்கும் கயிறு என்று உயர்கல்வியமைச்சர் இந்திகுணவர்த்தன கொழும்புப் பல்கலைக் கழகத்தில் கற்கைகளுக்கான அபிவிருத்திநிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மத்திய வங்கி அதிகாரிகள் கண்மூடித்தனமாக சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளை பின்பற்றுகின்றனர். எல்லாப்பிரச்சினைகளுக்கும் தீர்வு தருபவர்கள் தாமேஎன்றுஇவர்கள் நினைக்கின்றார்கள.

உலகின் பொருளாதார ஒழுங்கில் பாரிய குறைபாடுகள உள்ளன. பெரும் ஆபத்துகளும் உள்ளன. உறுதிமொழியடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து கடன்பெற்றது பற்றி மத்தியவங்கி அதிகாரிகள் சாதனையுணர்வு கொள்கிறார்கள்உண்மை அதுவல்ல. அதனைப்பெறுவதற்கும் நாம் எம்மை அடிமைப்படுத்த வேண்டியுள்ளது. மக்கள் பெரும்பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகிறார்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். நீதி நியாயம் நிறைந்த நாட்டை மக்கள் உருவாக்க வேண்டும் என அவர்அங்கு உரையாற்றுகையில் சுட்டிக் காட்டினார். (உ)

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(மல்லாகம்)

அளவெட்டி தெற்குப்பகுதியில் அண்மைக் காலமாக என்றுமில்லாதவாறு கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

கசிப்பு மயக்கத்தோடு வீதிகளில் செல்வோரின் சொற்களும் செயல்களும் இளம் சமுதாயத்திற்கு கேடுவிளைவிக்கும் எதிர்காலத்தை உருவாக்கக் கூடியவையாக இருப்பதாக மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-122)

## வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படும்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள ஜனநாயகக்கட்சியின் யாழ் மாவட்ட தலைமைச் செயலகத்தில், அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவை யாழ். வடபிராந்திய வகுப்பு தொழிலாளர் சங்கத்தின், தலைவர் க. இராசலிங்கம் தலைமையில் 150 ற்கு மேற்பட்ட தொழிலாளர் சந்தித்து தமது குறைபாடுகள் பற்றியும் தங்கள் சங்கத்தைப் பலப்படுத்த வேண்டிய நடவடிக்கை பற்றியும் கலந்துரையாடினர்.

இவர்கள் மத்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுகையில், யாழ். வடபிராந்திய வகுப்பு தொழிலாளர் சங்கத்தினர் சமர்ப்பித்த ஐந்து கோரிக்கைகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதோடு. ஆராய்ந்து செயற்படுத்துவோம் என்றார். (உ)

## பொதுக் கூட்டம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் பொதுக்கூட்டம் எதிர் வரும் 8 ஆம் திகதி அளவெட்டியிலுள்ள நாகவரத நாராயண சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறவுளளது.

பேரவையின் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகளுக்கான தெரிவு இடம்பெறவுள்ளது. (க-77)

## யாழ். பல்கலையில் நிகழ்வுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தில் விஞ்ஞான வார நிகழ்வுகள் ஆரமபமாகியுள்ளன.

விஞ்ஞானவாரத்தை ஒட்டி அப்பீட மாணவர்கள் பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளனர், (க-08)

## நாவற்குழிப் பகுதியில் விவசாய நடவடிக்கை விரைவில் ஆரம்பம்?

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் பிரதிநிதிகள் அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து தமது மீள் குடியேற்ற நடவடிக்கைக்கு ஆதரவாக மேற்கொள்ள வேண்டிய மேலதிக விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பின் போது ஏற்கனவே அமைச்சரினால் உறுதியளிக்கப்பட்டு, அமுல் செய்யப்பட்ட வேலைத்திட்டங்களான சீரான உணவு விநியோகம், குடிநீர் வசதி, போக்குவரத்து, மருத்துவ மனைவசதி, கல்விவசதி உட்பட பல தேவைகளின் நடவடிக்கைகள் சீரான முறையில் மக்களுக்கு கிடைக்கின்றனவா என ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் நாவற்குழி வடக்கு. நாவற்குழிமேற்கு, கோயிலாக்கண்டி ஆகிய இடங்களில் தற்காலிகமாக வேனும் விவசாயம் செய்வது பற்றி ஆலோசிக்கப்பட்டதுடன், மீளக் குடியேறியுள்ள அனைத்து மக்களுடனும் கலந்தாலோசித்துவருவதாகவும் கூறுறப்படுகிறது. தென்மராட்சியில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு இலகு கடன் வழங்குமாறு, மக்கள் பிரதிநிதிகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டது. (உ)

## பரு. டிப்போ முகாமையாளர் இடமாற்றத்தை கண்டித்து வேலைநிறுத்த முஸ்தீபு

(புலோலி)

வடபிராந்தியப் போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் எஸ். எஸ். மகாதேவனின் இடமாற்றத்தை ஆட்சேபித்து பருத்தித்துறைச்சாலை ஊழியர்கள் அப்பகுதி பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனுக்குமகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

முகாமையாளர் எஸ். எஸ். மகாதேவனை இடம் மாற்றம் செய்ய வேண்டாம் என்றும் அப்படி செய்வதாக இருந்தால் ஊழியர் அனைவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கப் போவதாகவும் அந்த மகஜரில்குறிப்பிடப்பட்டுள்ளது.

மகஜரை பொறுப்பேற்ற பின் பிரதேசசபைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன்தொடர்புகொண்டு நிலையை விளக்கிக் கூறியதையடுத்து.

கொழும்பு சென்ற வடபிராந்தியப்போக்கு வரத்து சாலை பொது முகாமையாளர் எஸ். மணிவாசகம்திரும்பி வரும் வரையில்எந்தநடவடிக்கையிலும் இறங்க வேண்டாமென்று ஊழியர்களுக்கு அமைச்சர் வேண்டுகோள விடுத்துள்ளார். (உ-52 23)

## முதலாளித்துவக் கட்சிகளை ஒன்று சேர்ப்பதற்கே ஐ. தே. க. பாடுபடுகிறது

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுமீது, ஐக்கிய தேசியக்கட்சி கொணடுவரவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானமும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நாட்டின் நிர்வாகத்தைச் சீர்குலைப்பதற்குசெய்த திட்டமிட்ட செயல் என்று இலங்கைகம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போதே இவ்வாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய அரசாங்கம் என்ற போர்வையில் முதலாளித்துவ சக்திகளை ஒன்று சேர்ப்பதற்கே ஐக்கிய தேசியக் கட்சி முயன்று வருகிறது.

1977 ஆம் ஆண்டு நடைபெற்றஆட்சியைப்போன்றஓர் ஆட்சியை ஏற்படுத்துவதே அதன் நோக்கம் என்று கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுளளது.

இது தொடர்பாக கட்சியின் செயலாளர் டி.யூ. குணசேகரா பத்திரிகைக்கு விடுத்த செய்தியில், யுத்தத்திற்காகப் பெருந்தொகையாக மேற் கொள்ளப்படும் செலவுகளை நாட்டு மக்கள் இனிமேலும் பொறுத்துக் கொள்ள முடியாது என்றும் இனப் பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (வ)

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

இலங்கை விவசாயக் கல்லூரிகளுக்கு அனுமதி பெறும் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம் மாதம் 13 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (உ-5)

# குழந்தையைத் திருடிய தம்பதிகளுக்குச் சிறை

(புவனஸ் அயர்ஸ்)

குழந்தையைத் திருடிய ஆர்ஜன்டீனத் தம்பதிகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1976 தொடக்கம் 1983 வரை அங்கு இடம்பெற்ற சர்வாதிகாரப் போரின் போது காணாமல் போன குழந்தை ஒன்றை மேற்படி இருவரும் திருடியமை உறுதியாகியதையடுத்தே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இருவரும் இதே குற்றச்சாட்டின் பேரில் 1983 இல் கைது செய்யப்பட்ட போதிலும், 1990 ஆம் ஆண்டு பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டனர்.

இருந்தபோதும், இவர்கள் மீதான குற்றப் பிரேரணை மீள் விசாரணைக்கு எடுக்கப்பட்டதையடுத்து தற்போது இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜேணல் ெசப ரினோ ரெண்டாவுக்கு 9 வருட சிறைத்தண்டனையும் மனைவிக்கு ஐந்தரை வருடச் சிறைத்தண்டனையும் மேற்படி குற்றத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. (உ-7)

# சிரிய தொ.தொ. கோபுரம் மீது இஸ்ரேல் விமானங்கள் தாக்குதல்

(ஜெருசலேம்)

இஸ்ரேலுக்குச் சொந்தமான குண்டு வீச்சு விமானங்கள் சிரியாவின் நடார் தொலைத் தொடர்புக் கோபுரத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

லெபனானின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த சிரியாவின் இத்தொலைத் தொடர்புக் கோபுரம் தாக்கப்பட்டதில் 3 சிரியப் படையினரும் ஒரு லெபனான் படை வீரரும் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் ஹிஸ்புல்லா ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு இஸ்ரேலியப் படையினர் காயம் அடைந்தமை தெரிந்ததே.

இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய அரசு வெளியிட்ட ஓர் அறிக்கை தெரிவிக்கின்றது.

சிரியா தனது படையினரில் 35 ஆயிரம்பேரை தொடர்ந்தும் லெபனானில் நிலை நிறுத்தி இஸ்ரேலியப் படையினருக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# இஸ். ஏவுகணைத் தாக்கு பலஸ்தீனர் மூவர் பலி

(ஜெருசலேம்)

மத்தியகிழக்கின் மேற்கு கரையில் இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் நடாத்திய ஏவுகணைத் தாக்குதலில் பலஸ்தீனர் தீவிரவாதிகள் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

பலஸ்தீனத் தீவிரவாதிகள் கார் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த சமயம், திடீரென வானில் வந்த இஸ்ரேலிய ஹெலிகொப்டர் காரின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடாத்தியதாகவும், அதனால் அவர்கள் பயணித்த கார் தீப்பற்றிக் கொண்டதில் மூன்று தீவிரவாதிகளும் உடல் கருகிப் பலியானார்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [உ-9]

# பிஜி முன்னாள் பிரதமரை விடுவிக்கப் பாடுபட்டு வந்த ச. செ. ச. குழுத் தலைவர் கொலை

(பிஜி)

பிஜி நாட்டின் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் தலைவர் ஜோர்ன்ஸ் கொட் கடந்த சனியன்று அவர் தங்கி இருந்த இல்லத்தில் வைத்து கொலைசெய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியப்பிரஜையாகிய ஜோர்ன்ஸ் கொட்டுடன் அவரது உதவியாளர் ஒருவரும் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பிஜியில் இடம்பெற்ற அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து பிரதமராக இருந்த மகேந்திரசௌத்திரி உட்பட பல அரசியல் தலைவர்கள் கிளர்ச்சியாளர்களால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மேற்படி அரசியல் தலைவர்களை விடுவிக்க செஞ்சிலுவைக் குழுவின் தலைவர் ஜோர்ன்ஸ் கொட் முயற்சி எடுத்துவந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# கருணாநிதியின் கைதைக்கண்டித்து: கட்சித் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம்

## பொலிஸாரின் எதிர்ப்பை மீறி கலவரங்கள் நடைபெற்றன

(சென்னை)

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி கடந்த சனிக்கிழமையன்று கைது செய்யப்பட்டதையடுத்து தி.மு.கவும் அதன் தோழமைக் கட்சிகளும் நேற்றைய தினம் தமிழகத்தின் பல பகுதிகளிலும் கதவடைப்பில் ஈடுபட்டதுடன் ஜெயலலிதா ஆட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன.

இதேவேளை இவ்வாறான போராட்டங்கள் இடம்பெறலாம் என முன் எச்சரிக்கையாக நூற்றுக் கணக்கான தி.மு.கழகத் தொண்டர்களை பொலிஸார் கைது செய்தபோதும் தமது ஆர்ப்பாட்டம் மற்றும் கதவடைப்புப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தியுள்ளதாக தி.மு.க கட்சி சார்பானவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஆர்ப்பாட்டத்தின் போது, அரச பஸ்களுக்கு கல் வீசியதுடன் தீவைப்பு மற்றும் பொலிஸாருடன் மோதிய சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

# மலேசிய சபா மாநிலத்தில் இடைத்தேர்தல் விரைவில்

(கோலாலம்பூர்)

மலேசியாவின் கிழக்கு மாநிலமான சபாவில் அடுத்த மாதம் இடைத்தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மோசடிகள் நடைபெற்றிருப்பது கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்தே இந்த இடைத்தேர்தலை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக மலேசிய தேர்தல் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

வருமமாதம் 21 ஆம் திகதி மேற்படி இடைத்தேர்தல் நடைபெறவுள்ளதாகவும் இதில் மோசடிகள் இடம்பெறாதவாறு கடுமையான கண்காணிப்புப் போடப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைக் குழு மேலும் தெரிவித்துள்ளது. [உ-9]

# 11 ஆவது உலகதரிசன அறிவுப்போட்டியில்

## பரிசு பெறுவோர் பெயர் விபரம்

1 ஆம் பரிசு
பூங்கோதை பாலபாஸ்கரன்
பிரமபடி லேன், கொக்குவில்.

2 ஆம் பரிசு
கே. அரசேஸ்வரன்
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு
ச. கமலன்
யா/கனகரத்தினம் ம. ம. வித்தி. யாழ்ப்பாணம்.

இவர்களுக்கான பரிசுகள் 7-7-2001 அன்று வலம்புரிக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும்.

## பாராட்டு பெறுபவர்கள்

1) சி. நிரஞ்சன்
அம்பலவாணர் பாதை திருநெல்வேலி தெற்கு யாழ்ப்பாணம்.
2) பே. சகலகலாதேவி
பிரம்படி, கொக்குவில்
3) இ. குலசிங்கம்
5A வட்டாரம் நயினாதீவு
4) பா. லக்ஷ்மன்
தோப்பு அச்சுவேலி
5) கு. சுகந்தி
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

## ★ நிலாவுக்கு உல்லாசம் போகலாமே!

இன்னும் 40 வருடங்களில் சுமார் ஒரு மில்லியன் மக்கள் சந்திரனில் உல்லாசமாக இருப்பார்கள் என்றால் நம்ப முடிகிறதா?

இன்னும் 40 வருடங்களில் நாமெல்லாம் சர்வசாதாரணமாகச் சந்திரனுக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்ள இப்போதே ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகிறது இதற்கு சந்திரனில் பகப் பிரமாண்டமான ஹோட்டல் ஒன்றை நிறுவும் முயற்சியில் விஞ்ஞானிகள் இறங்கியுள்ளார்கள் இதன் பணிகள் முடிய இன்னும் 47 ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமாம். ஆனால் 2010 இல் முதலாவது உல்லாசப் பிரயாணக் குழு ஒன்று சந்திரன் செல்லவுள்ளது. அதனைத் தொடர்ந்து 40 வருடங்களில் ஒரு மில்லியன் மக்கள் அங்கு உல்லாசப் பயணத்திற்கு செல்லலாம் என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## ★ கொடிகள் பற்றி கொஞ்சம்

நாடுகள் தொடக்கம் ஊர்ச் சங்கங்கள் வரை தமக்கென்றொரு கொடியினை வைத்திருப்பது நாமெல்லாம் அறிந்தது தான்.

ஆதிகாலத்தில விலங்குத் தோல்கள் தானாம் கொடிகளாகப் பயன் படுத்தப்பட்டன பின்னர் கி. மு 1100 இல் தான் தோலுக்குப் பதில், துணிகள் பயன்படுத்தப்படும் வழக்கம் உருவாகியது.

இக் கொடிகள் பற்றி மேலதிகமான சில சுவாரஸ்ய தகவல்களைப் பார்ப்போம். நீண்ட காலமாக ஒரே விதமான கொடியைப் பயன்படுத்தும் நாடு டென்மார்க் 1219 முதல் அந் நாட்டுக் கொடியில் மாற்றமெதுவும் செய்யப்படவில்லை.

லிபியா நாட்டுக் கொடி தான் மிகவும் எளிமையானது பச்சை நிற நீண்ட சதுரத் துணியே அதன் கொடி. இக் கொடியில் சின்னங்கள் எதுவுமில்லை. சைபிரஸ் நாட்டுக் கொடி ஒன்றில் மட்டும் தான், அந் நாட்டின் வரைபடம் காணப்படுகிறது.

-அவதானி-

# நிவாரண அனுமதிப் பத்திரம்

பச்சிலைப்பள்ளியிலிருந்து இடம்பெயர்ந்து ஏனைய பிரிவுகளில் வசிப்பவர்களுக்கான நிவாரண அனுமதிப்பத்திரம் நேற்று திங்கட்கிழமை முதல் வழமையான இடங்களில் வைத்து வழங்கப்படுவதாகவும்,

இம்மாதம் முதல் சங்கானையில் இயங்கும் பளை ப. நோ. கூ. சங்கக் கிளையில் வைத்து இதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் செயலர் தெரிவித்தார். (உ)

# ஜெயாவின் செயலைக் கண்டித்து ராஜேந்தர் ஆர்ப்பாட்டம்

(புதுடில்லி)

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமாகிய கலைஞர் மு. கருணாநிதி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து பிரபல திரைப்பட இயக்குநரும், நடிகரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவரான டி. ராஜேந்தர் தனது சகாக்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார்.

சென்னையின் பிரதான வீதி ஒன்றில் கலைஞரின் கைதைக் கண்டிக்கும் வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளுடன் ஆர்ப்பாட்டத்தினை நடத்திய டி. ராஜேந்தர் முதல்வர் ஜெயலலிதாவை கண்டித்து கோஷங்களை எழுப்பினார். [உ-7]

# சைக்கிள் தரிப்பிடம்

(மல்லாகம்)

சுன்னாகம் பொதுநூலகத்திற்கு சைக்கிள் தரிப்பிடம் அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சைக்கிள் தரிப்பிடம் அமைக்கப்படாமையால் அங்கு செல்லும்வாசகர்கள் எதிர்நோக்கி வந்த இன்னல்களைக் கருத்தில் கொண்டே இப்பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ-122)

இடிக்குந் துணையாரை
ஆள்வாரை யாரோ கொடுக்
குந் தகைமையவர்.
குறள்

# வலம்புரி

## ஆளுநருக்கு அனுதாபம் தந்த பரிசு

கலைஞர் மு கருணாநிதியைக் கைது செய்ததால் தமிழக அரசியல் நிலைமைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இந் நிலைமை ஜெயலலிதாவின் ஆட்சிக்கு ஆப்பு வைத்து விடும் என்ற கருத்து தமிழ் நாட்டு அரசியலில் மட்டுமல்ல ஈழத் தமிழர்கள் மத்தியிலும் பரவலான ஆய்வுக்குட்பட்டுள்ளது.

கலைஞர் கருணாநிதியைச் சட்ட ஒழுங் கிழ் கைது செய்யவில்லையெனவும், அவரைக் கைது செய்த முறை ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட இழுக்கு எனவும் கருதப்படுகிறது.

ஜெயலலிதா முதலமைச்சராகப்பதவியேற்றது சட்டத்திற்கும் அரசியல் யாப்புக்கும் முறையானதல்ல என்ற வாதப்பிரதிவாதங்களின் சூடு தணிவதற்கு முன்னதாக கருணாநிதியின் கைது இடம்பெற்று விட்டது. தமிழக ஆளுநர் பாத்திமா பீபி கருணாநிதியின் ஆட்சியில் ஜெயலலிதாவைக் கைது செய்வதற்கான அனுமதியைக் கொடுத்தவர். அதேநேரம் ஜெயலலிதாவின் ஆட்சியில் கருணாநிதியைக் கைது செய்வதற்கும் அனுமதி வழங்கியிருந்தார்.

தமிழக ஆளுநர்களாக இருந்தவர்களில இரண்டு முதலமைச்சர்களைக் கைது செய்வதற்கு அனுமதி வழங்கிய பெருமை ஆளுநர் பாத்திமாபீபியையே சாரும்.

எனினும் தமிழக அரசியலில் ஆளுநர்களாக இருந்தவர்களுக்கு வழமையாக ஏற்படும் ஆபத்திலிருந்து பாத்திமாபீபியாலும் தப்பமுடியவில்லை.

ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியானசெல்வி பாத்திமாபீபி நேர்மை தவறாத ஆளுநர் எனப் பெயரெடுத்தவர் ஆனால் என் செய்வது, கலைஞரினதும், ஜெயலலிதாவினதும் நடிப்பில் பாத்திமா பீபியின் நேர்மை பறிபோனமை வேதனைக்குரியதே.

ஜெயலலிதாவைக் கைது செய்வதற்கு அனுமதி கொடுத்த பாத்திமா பீபிக்கு கலைஞர் கருணாநிதி ஜெயலலிதாவின் ஊழல் விவகாரங்களில் நடந்து கொண்ட முறை பிடிக்கவில்லை. இதனால் தன்னையறியாமலே ஜெயலலிதா மீது ஓர் அனுதாபம் பாத்திமாபீபிக்கு ஏற்பட்டது. அந்த அனுதாபத்தின் விளைவு ஆளுநர் பதவிக்கே ஆப்பு வைத்து விட்டது.

---

# முட்டில்தொடங்கி இருதயத்தில் முற்றுகையிடும்

# வாதநோய்களைச் சிகிச்சை குணமாக்கும்

**மருத்துவ விளக்கம்**

**டாக்டர் கே. எஸ். வி நாயுடு**

வாத நோய்களில் கீல் வாதம் எலும்பு அழற்சி, நரித் தலை வாதம்' தனுர்வாதம், பாரிசவாதம் முடக்குவாதம், நச்சுவாதம், சண்டிவாதம், வலிவாதம், சூதகவாதம், சந்து வாதம் போன்ற பல வகைகளுண்டு.

### நோய் ஏற்படும் இடங்கள்

முழங்கால், முழங்கை மணிக்கட்டு, கணுக்கால் மூட்டு, எலுமபுகள், கைவிரல்மூட்டு எலும்புகள், கழுத்து, இடுப்பிலுள்ள எலும்புகள் போன்ற இடங்களில் வாத நோய்கள் தாக்கும்.

### நோய் வரும் காரணங்கள்

நார்ச்சத்து உள்ள உணவுப் பொருட்களை உணவில் சேர்க்காததாலும், புளிப்பு வகை உணவுகளை அதிகம் சாப்பிடுவதாலும், உடற் பயிற்சி இல்லாமையாலும், நீண்டகால மலசிக்களாலும், மூப்பின் காரணமாக மூட்டு எலும்புகள் தேய்வதாலும், எலும்பு மூட்டுக்களை வாத நோய்கள் தாக்குவதாலும், சில நோய்களுக்குச் சரியான சிகிச்சையளிக்காமல் விட்டு விடுவதால் அந்த நோய் உள்ளுக்குள்ளேயே அமுக்கப்படுவதாலும், பிட்டாஹிமாலிட்டிச்ஸ்டரெப்டோ காக்சஸ் என்ற கிருமித் தாக்குதலினாலும், இந்த வாதநோய்கள் ஏற்படும்.

### நோய்களால் வரும் உபாதைகள்

எலும்பு மூட்டுக்களில்வீக்கம் ஏற்பட்டு மிகுந்த வலியையும், விண் விண் என்று நெரிக்கின்ற குத்து வலியையும் உண்டாக்கும். சில சமயங்களில் மூட்டுகள் சிவந்து காய்ச்சலும் ஏற்படும். இவ்வாறு வலிஏற்டும் போது நோயாளிகள் ஓய்வு எடுக்காமல், மூட்டுகளை அடிக்கடி அசைப்பதால் மூட்டுக்களின் இணைப்புக்கள் தேய்ந்து அதிலிருக்கும் ஜவ்வும் காய்ந்து நீட்டவும் மடக்கவும் முடியாமல் போய் விடும்.

### கீல் வாதக்காய்ச்சல்

இந்த கீல்வாதக் காய்ச்சல் என்றவகை நோய்தான்சுமார் 15வயதுக்குட்பட்ட குழந்தைகளையே தாக்குகிறது. குழந்தைப் பருவத்தின் போது, தொண்டையில் புண்ணோ கரகரப்போ ஏற்படுவதுதான் இதன்முதல் அறிகுறி பீட்டா ஹிமாலிட்டிக் ஸ்ரெப்டோ காக்கஸ் என்ற நுண்கிருமிகள் தாக்குதலின் விளைவாக அடிக்கடி ஜுரம் ஏற்படும். இதற்கு சரியான சிகிச்சையை அளிக்காமல் அலட்சியமாக விட்டு விடுவோமானால் சிறு வயதிலிருந்தே இருதயவால்வுகள் பழுதடைய ஆரம்பித்து விடும் இதனால் ஆண்களுக்கு சுமார் 15வயதிலிருந்து 25வயதிற்குள்ளும், பெண்களுக்கு பூப்பெய்த நாள் தொடங்கியதிலிருந்தும் தெரிய ஆரம்பிக்கிறது.

### இதன் விளைவுகள்

இந்த ருமட்டிக் ஜுரம் முதலில் பெரிய மூட்டுக்களான முழங்கை, முழங்கால், மணிக்கட்டு, கணுக்கால் போன்ற இடங்களில்தான் வலியையும், வீக்கத்தையும் அடிக்கடி ஏற்படுத்துகிறது. இது ஆரம்ப காலங்களில் தெரிவதில்லை. இந்த கிருமிகள் இருதயத்தின் மூன்று தசைப்பகுதிகளையும், என்டோ கார்ட்டியர் மையோகாட்டியம், பெரிகாயடியம்) மற்றும் மூன்று முக்கி, வால்வுகளையும் (ஈரிதழ் வால்வு, தமனி வால்வு, மூவிதழ் வால்வு) தாக்கிப் பழுதடையச் செய்கிறது, மேலும் இந்தக் கிருமிகள் முதலில் மூட்டுக்களைத் தொட்டு விட்டு, பின் இருதயத்தையே பழுதடையச் செய்து விடுகிறது. இருதயத்தின் பணியில் வால்வுகளுக்கு மிக முக்கிய பணியுண்டு. இரத்தம் ஒரே திசையில் செல்ல இந்த வால்வுகள் சரியான படி மூடித் திறக்க வேண்டும். வால்வுகள் குறிப்பிட்ட படி இயங்காமல் போனால் இரத்த ஒட்டம் தடைப்பட்டு நம் உடல் இயக்கம் திசை மாறுகிறது.

### உடல் உபாதைகள்

ஜுரம் அடிக்கடி வந்து போகும். சிறிது தூரம் நடந்தாலும், மேல் மூச்சு வாங்கும், எல்லோரையும் போல நடமாட முடியாது, மயக்கம் வரலாம், இரத்தச் சோகையும் வர வாய்ப்புண்டு, சளியுடன் இரத்தம் கலந்து போகலாம். கால்களும் வயிறும் வீங்கிப் போகலாம்.

### இதற்குரிய மருந்துகளிற் சில

வலியும் வீககமும் உள்ள இடத்தில் தடவுவதற்கு வாத கோடாரித் தைலம், வாத கேசரித் தைலம், நாராயணத் தைலம், தன்வந்தரத் தைலம், ஆம வாதத் தைலம், போன்றதைல வர்க்கங்களும் உள்ளுக்குச் சாப்பிடுவதறகு க்ஷீரபலா, (101) பலா தைலம், மஹா ராஜ பிரசாரினி தைலம், போன்றவைகளும், ரஸ செந்தூரம், அய வீர செந்தூரம், சண்ட மாருதச் செந்தூரம். மான் கொம்பு பற்பம், சிலாசத்து பற்பம், போன்ற பற்ப செந்தூர வகைகளும், யோகராஜ குக்குலு, ஹப்பே சுரஞ்சான், தன் வந்திர குலிகா, பிரபாகரவடி போன்ற குளிசைகளும் இருக்கின்றன.

### ஆலோசனை

இந்த வாதநோயால் இருதய வால்வுகள் பாதிக்கப்பட்டு நான் ஒரு நிரந்தர இருதய நோயாளி என்று விதியை நினைத்து இனி வாழ்க்கையே அவ்வளவு தான் என்று இருந்து விடாதீர்கள். இதற்கு மாற்று வகை மருந்துகள் ஏராளம், உங்கள் நம்பிக்கைதான் அவசியம். தகுதி வாய்ந்த மருத்துவரால் சரியானபடி சிகிச்சை அளித்தால் இருதயத்தையும்இருதய வால்வுகளையும் பலமாக்கி விடலாம்,

---

## தேங்காய்த் தோட்ட முதலாளிக்கு கத்தி வெட்டு

(மந்திகை)

தென்னந்தோட்டத்தில் தேங்காய் பிடுங்க அனுமதிக்காததால் ஆத்திரமுற்ற கள்வர் கூட்டம் அதன் உரிமையாளரைக் கத்தியால் வெட்டியதோடல்லாமல்,

அவருடன் உதவிக்கு நின்ற வரைக் கடுமையாகத் தாக்கியுள்ளது.

சடந்த வெள்ளியன்று நடைபெற்ற இச் சம்பவத்தில் மீசாலை மேற்கைச்சேர்ந்த சுந்தரம் கணபதிப்பிள்ளை (வயது 70) என்பவரே வெட்டுக்காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடுமையான தாக்குதலுக்கு உள்ளான வேலுப்பிள்ளை கனகலிங்கம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-23)

## கொடுத்த கடனை மீளப்பெறுவதில் இழுபறி கைகலப்பில் இருவர்காயம்

(மந்திகை)

கொடுத்த கடனை மீளத் தருமாறு கேட்ட போது ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த இருவர் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்தவெள்ளி மாலைதுன்னாலைதெற்கில் நடைபெற்ற இச்சம்பவத்தில் தல்லையப்புலத்தைச் சேர்ந்த வேலன் செல்லன் [வயது73] கந்தன் மகாதேவன் [வயது27] ஆகிய இருவருமே காயமடைந்தவராவர்.

இச்சம்பவம்தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-23)

## பாடசாலை வளவில் சினிமா படம் காண்பித்தவர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(மந்திகை)

அனுமதியின்றி பாடசாலை வளவினுள் திரைப்படம் காண்பித்தவர்கள் நெல்லியடிப் பொலிஸாரினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன், ரீ.வி, டெக் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டன.

கடந்த வெள்ளியன்று கரவெட்டி திரு இருதயக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தோர் திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்த வேளை மழை ஏற்பட்டதாகவும்,

இதனையடுத்து அவர்கள் திரைப்படத்தை மேற்படி பாடசாலைக் கட்டடத்தினுள் வைத்துக் காட்டிய வேளை நெல்லியடிப்பொலிஸாருக்குக் கொடுத்த தகவலின் பேரில்,

திரைப்படம் காண்பித்தவர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கூட்டிச் செல்லப்பட்டதுடன்,

ரீ.வி, டெக் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும்,

பின்னர் எச்சரிக்கை செய்யப்பட்ட பின் விடுதலை செய்ததுடன் ரீ.வி, டெக் என்பன திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிய வந்துள்ளது. (உ-23)

## விளையாட்டு போட்டி

(கல்வயல்)

பருக்தித்துறை சுப்பர் மடத்தில்இயங்கும்மயிலிட்டித் துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் பாலர் பாடசாலையின் விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

(உ-111)

## குழு மோதலில் தொடர்புடைய 15 பேர் நீதிமன்றில் ஆஜர் இருவர்பிணையில் விடுதலை

(மந்திகை)

கடந்த 11 ஆம் திகதி துன்னாலைபகுதியில்நடைபெற்ற கோஷ்டி மோதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் 15 பேர் கடந்த வெள்ளியன்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றல் ஆஜர் செய்யப்பட்டனர்.

துன்னாலை தெற்கைச் சேர்ந்தகிட்டிணன் ஜெயசீலன் தம்பிராசா தங்கராசா, வேலன் செல்வம், செல்வம் ஜெகன், வேலன்குலேந்திரம், இராசேந்திரம் ரஜனிக்காந், இராசன் சசிக்குமார், நாகமுத்து தெய்வேந்திரம், இராசன் சிவகுமார், கணபதி வினோதன் ஆகியோரும்.

துன்னாலை கிழக்கைச் சேர்ந்த சிவபாதம் சிவஞானம், சிவபாதம் சிவானந்தம் பெ. தம்பிராசா, இராசையா விஜயபாலன் செல்வன் சதீஸ்வரன் ஆகியோருமே ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

சந்தேக நபர்கள் இருவர் 2 ஆயிரத்து 500 ரூபா காசுப் பிணையிலும் 5 ஆயிரம் ரூபா ஆட் பிணையிலும் செல்ல உத்தரவிட்டதுடன் ஏனைய 13 பேரையும் எதிர் வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

(உ-23)

## அபி. தொண்டர்கள் சிரமதானம்

(சங்கானை)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அபிவிருத்தித்தொண்டர்கள் கடந்த செவ்வாய்க் கிழமை பண்டத்தரிப்புஇந்து மகளிர் கல்லூரிச் சுற்றாடலில் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (உ-123)

# இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண

# தேசிய அரசை அமைப்பதே ஒரே வழி

## கொழும்பு அதிமேற்றாணியார் கடிதம் அரசியல் தலைவர்களுக்கு

(கொழும்பு)

நாட்டை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டுமாயின் தேசிய அரசு ஒன்றை அமைப்பதே சிறந்த வழியாகுமென கொழும்பு அதிமேற்றாணியார் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்

அரசியல் கட்சி ளின் தலைவர்களுக்கு அவர் எழுதிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாடு இன்றுள்ள நிலையில் சகல அரசியற் கட்சிகளும் இணைந்துதேசிய அரசுஒன்றை அமைப்பதன் மூலம் நாட்டின் தற்போதைய நிலமைகளுக்கு தீர்வுகாண முடியும்.

நாடு தற்போது தேர்தல் ஒன்றைச் சந்தித்தாலும் எந்தவொருகட்சியும் ஆட்சி அமைக்குமளவிற்குப் பெரும்பான்மையைப் பெறமுடியாது. எனவேஇவ்வாறானநிலைமையில் உறுதியான அரசாங்கம் ஒன்றை அமைத்து தற்போதைய அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க தேசிய அரசு ஒன்றை அமைப்பதே சிறந்த மார்க்கமாகும்என்று அதிமேற்றாணியார் சுட்டிக் காட்டியுள்ளார் (ந-5)

யாழ்..

இது தொடர்பான பத்திரிகையாளர் மகாநாடொன்று இன்று பிற்பகல் 3மணிக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாகவும், இம்மகாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ் சுரேஷ் அணி, ரெலோ, புளொட் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்வதாகவும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பங்குபற்றுவது தொடர்பாக யாழ் மாவட்ட எம். பி அ. விநாயகமூர்த்தியுடன் தொடர்பு கொள்ளவுள்ளதாகவும் யாழ். மேயர் என். ரவிராஜ் தெரிவித்துள்ளார். (வ)

## கொலைச் சந்தேகநபர் கைது

கொக்குவிலில் நேற்று குடும்பப்பெண்ணைக் குத்திக் கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் நபர் நேற்று பொலிசாரால்கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைக்கான காரணம் திருட்டு முயற்சியா அல்லது பழிவாங்கும்நோக்குடையதா என்பது பற்றிய விசாரணைகளில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

## குடியரசுத்தலைவரின் ஆட்சிக்கு பலரும் பரிந்துரை

# தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு நிலைமை

# பிரதமர் வாஜ்பாய் தலைமையில் ஆராய்வு!

(சென்னை)

தமிழகமுன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி மற்றும் மத்திய அமைச்சர்களான முரசொலி மாறன் ,ரீ. ஆர் பாலு ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமையினால் . எழுந்த சிக்கல்கள். மற்றும் தமிழ்நாட்டின் அரசியல் நிலவரம குறித்துஅமைச்சரவைக் கூட்டம்நேற்று பிரதமர் வாஜ்பாய் தலைமையில் ஆராய்ந்தது.

தமிழகத்தில்நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக சென்னைக்குவந்த தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஜோர்ஜ் பெர்னான்டஸ்குழு மற்றும் மத்திய உள்ளக விசேட குழு ஆகியன நேற்று பிரதமர் வாஜ்பாயிடம் தமிழகத்தின் நிலவரம் தொடர்பான தமது அறிக்கையைச் சமர்ப்பித்தனர்.

பெர்னான்டஸ் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி, தமிழக ஆளுநர் செல்வி பாத்திமா பீபியை மத்திய அரசு மீள அழைத்தமையை வரவேற்பதாகவும் கலைஞர் கருணாநிதி மற்றும் மத்திய அமைச்சர்களை கைது செய்து மோசமாக நடத்தியதுடன்சிறையில் அடைந்திருக்கின்றமை பாரியமனிதஉரிமை மீறலென்றும், சமஷ்டி ஆட்சியில் இதுவொரு புது விந்தை நிகழ்வென்றும் தெரிகிறது தமிழக ஆட்சியை குடியரசுத் தலைவரின்கண்காணிப்பில் கொண்டு வந்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது அவசியமென்று வலியுறுத்தியுள்ளது.

மத்திய அமைச்சர்கள் மாறன், மற்றும் பாலு ஆகியோருக்கு பிணை வழங்கப்பட்ட போதும் அவர்கள் தம் மீதான வழக்கு விசாரணை முடியாதவரை தாம் பிணையில் செல்லமாட்டோமென்று தெரிவித்திருக்கின்றனர்.

கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழி தந்தையை பிணையில் விடுவிக்க இன்று மனுத்தாக்கல் செய்கின்றார்;

தமிழகத்தில் கலைஞருக்கு ஆதரவாக குழப்பங்களும் அதிகரித்து தமிழகத்து நிலமைநாளுக்கு நாள்தீவிரமடைந்து வருவதாகவும் நிர்வாகசெயற்பாடுகள் ஸ்தம்பிதமடைதுள்ளதாகவும் தமிழகச்செய்திகள் தெரிவிக்கின்றன. [இ]

## கண்காட்சி நாளைவரை

(யாழ்ப்பாணம்)

வலய மட்டத்திலான சித்திரக் கண்காட்சிகள் யாழ். கனகரட்ணம் மத்தியமகாவித்தியாலயத்தில் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

இக்கண்காட்சி தொடர்ந்து நாளை வரை இடம் பெறவுள்ளது.

கண்காட்சிகளை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆர்வலர்கள் சென்று பார்வையிடலாம் எனவும் தனிப்பட்ட அழைப்புக்கள விடுவிக்கப்படவில்லை எனவும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-10)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினருக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும்5ம் திகதி வியாழக்கிழமை காலை9 30 மணிக்கு தலைவர்வே மணிமாறன் தலைமையில்இலக்கம் 34,மாரியம்மன் வீதியில் அமைந்துள்ள சங்கஅலுவலகத்தில நடைபெறவுள்ளது. (உ)


**ராஜா**

யாழ்ப்பாணம்

லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்

**சிட்டிசன்**

தினசரி: 10-30, 2-00
5 00 [பு நே]
(கி-2125)

**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

இன்று முதல்
சுப்பர் ஸ்ரார் விஜயசாந்தி
சரத் குமார், வெங்கடேஸ்
நடித்த

**முதலமைச்சர் ஜெயந்தி**

வெண்திரையில்
முதன்முதல்
சுப்பர் ஸ்ரார்
விஜயசாந்தியின் படம்
(ரீல்ஸ் வெளியீடு)
தினசரி 11-00, 2-30
வி, ஞாயிறு6-30 மட்டும்
(3264


அரசின்.,.

என்றும் 'திட்டமிடப்பட்ட போர் விரிவாக்கம்' என்றும் விடுதலைப் புலிகள் சாடியுள்ளனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எழுந்த அரசியல் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு சிங்கள தேசியவாத சக்திகளின் ஆதரவை அணி திரட்டும் நோக்குடனேயே சந்திரிகா அரசாங்கம்இந்தக் கீழ்த்தரமான நடவடிக்கையில் இறங்கியிருப்பதாக விடுதலைப்புலிகள்குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றும் நோக்குடன் விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வந்த போர் ஆயுதங்களை முறியடிப்பதற்காகவே ஆகாயக் குண்டு வீச்சுக்களும், பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டதாக சிறிலங்கா அரசு ஒரு கட்டுக் கதையைப் புனைந்திருக்கிறது. இந்தக் கூற்றில் எந்த வித உண்மையும் இல்லை. சிங்கள அரசு கற்பித்தது போன்று விடுதலைப் புலிகள் பெரிய அளவில் போர் ஆயுத்தங்கள் எதுவும் செய்யவில்லை.

புலனாய்வுத் தகவல்கள் கூறியதாக அரசு சொல்வது எல்லாமே வெறும் கட்டுக் கதை. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் எழுந்துள்ள நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே அரசாங்கம் போரைத் தீவிரப்படுத்தி மக்களின் கவனத்தைத் திசை திருப்ப முனைகின்றது. பேரினவாத, தீவிர வாதிசக்திகளைதனக்கு ஆதரவாக அணி திரட்டும் நோக்குடனேயே தமிழருக்கு எதிராகப் போரைத் தீவிரப் படுத்தியுள்ளது.

தென்னிலங்கைச் சிங்கள மக்கள் சந்திரிகாவின் ஆட்சி பீடம் மீது ஆத்திரமும் வெறுப்பும் கொண்டுள்ளனர். இச்சூழலில் தேசிய சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான முறையில் சிங்கள தேசியவாதத்தை தட்டியெழுப்பும் நோக்குடன் அரசாங்கம் விசமப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகிறது. இது ஒரு ஆபத்தான போக்கு. இந்த அரசாங்கத்திடம் ஆக்கபூர்வமான கொள்கை எதுவும் இல்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. இந்நாடு எதிர்கொள்ளும் எந்தப் பிரச்சினையையும் தீர்த்து வைப்பதற்கு இந்த அரசு தவறிவிட்டது. எனப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு ஊக்கம் அளிக்கும் நோக்கில் நாம் சகல முயற்சிகளையும் மேற்கொண்டோம். நீண்டகாலத்திற்கு தொடர்ச்சியாகப் போர்நிறுத்தம் செய்தோம். தென்னிலங்கையில் வன்முறைத் தாக்குதல்களைத் தவிர்த்தோம். சர்வதேசச் சமூகம் சிறிலங்கா அரசாங்கத்தைச் சமாதானப்பாதையில் இட்டு வரும் என்ற நம்பிக்கையுடன் நாம் இப்போதும் பிரகடனப்படுத்தாத சமாதானம் பேணி போர் நடவடிக்கைகளைத் தவிர்த்து வருகின்றோம். ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ சமாதானத்திற்கு விரோதமான தந்திரோபாயங்களையும் கொள்கைகளையுமே கடைப்பிடித்து வருகிறது.

நோர்வேயின் அனுசரணை முயற்சியில் குறுக்கிட்டு இருதரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமாதானத் தூதுவர் எரிக்சொல்கைமின் அந்தஸ்தைக் குறைத்து ஓரம் கட்டியதால் 'சமாதானவழிமுறைக்கு பெரிய பாதகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அத்தோடு, இப்போது வான்தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியதால்சமாதானமுயற்சிகளுக்கு நிரந்தரமான பாதிப்பு ஏற்படும் சூழ்நிலையும் உருவாகியுள்ளது'' இவ்வாறு புலிகளின் அறிக்கை கூறுகிறது.

தமிழர் தாயகத்தில் போர் நிலைமை தீவிரப்படுத்தப்படுமாயின் அதனால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் கடுமையாக தனது அறிக்கையின் முடிவுரையில் கடுமையாக எச்சரித்தும் உள்ளனர்; (வ)

சுயாதீன...

கள் நடைபெற்றுள்ளது.

இத்தவேளை நம்பிக்கையில்லாப்பிரேரணை பாராளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முன்னர்எக்கட்சியும் ஐந்துசுயாதீனஆணைக்குழுக்களை அமைப்பதுபற்றிய எநதக்கட்சி முடிவெடுக்கிறதோ அக்கட்சியையே ஜே வி. பி ஆதரிக்குமென்று கட்சிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [இ]

பட்டப்,..

சம்பவம் பற்றி தெரியவருவதாவது பிரஸ்தாப பெண்ணின் வீட்டிலுள்ள தொலைபேசி இணைப்பை பெறுபவர் போன்று உள்ளே நுழைந்த திருடன் பிரஸ்தாப பெண்ணைக் கத்தியால் குத்திக்கொலைசெய்து விட்டு அவர் அணிந்திருந்த நகைகளை அபகரித்துச் சென்றுள்ளார்.

சம்பவம் நடந்த போது கொலை செய்யப்பட்டவரின் தாயார் கிணற்றடியில் உடுதுணி .தோய்த்துக கொண்டு நின்றதாகவும், எனினும் தொலை பேசி இணைப்பைப் பெறவந்தவரைநேரில் கண்டதாகவும், கொலையாளி முன்பும் பலதடவைகள் தொலை பேசிக்காகவும், வைத்திய சிகிச்சைக்காகவும் தமது வீட்டுக்கு வந்தவரெனவும் தாயாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுளளது.

சம்பவத்தில் கொலை செய்யப்பட்ட பெண்மணி யாழ்மாவட்ட ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் தவராஜாவின் சகோதரி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-10-43-104)

பொ. ஐ. மு

தரத்வத்தை,சமரவீர உட்படப்பலர் கலந்துகொண்டனர் நம்பிக்கைஇலலாத் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடும் தினத்தில் வெற்றியைக் கொண்டாடுவதற்கும் ஏற்பாடுகள்செய்யப்படவுள்ளன.

படகில்..

களாவர்;

சம்பவம் பற்றி காயம் அடைந்த ஒருவர் தகவல் தெரிவிக்கையில்;

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளை பேரிரைச்சலுடன் வந்த ஷெல்லொன்று படகின் நடுவில் விழுந்து வெடித்தது; இதனால் படகு இரண்டாகப் பிளந்தநிலையில் நாம் கடலில் தூக்கி வீசப்பட்டோம். அருகில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படகின் உதவியினால் உயிரிழந்த நண்பனின் சடலத்தையும் தூக்கிக்கொண்டு கரைசேர்ந்ததாகத் தெரிவித்தார். (இ-10-43-104)

## சபாநாயகர் அனுராவிடம் எதிர்க்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தொடர்பாக பாராளுமன்றத்தில் அமைக்கப் படவுள்ள தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சிகளுக்குக் கூடியளவு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்று சபாநாயகரிடம் எதிர்க்கட்சி பாராளுமன்றஉறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

தெரிவுக்குழு அடுத்தவாரமளவில் அமைக்கப்படவுள்ளதால் ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர்கள் கூடுதலாக இடம்பெற வேண்டுமெனவும் சபாநாயகரிடம் கேட்கப்பட்டுள்ளது. (வ)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்சோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவ் வகத்து அச்சகத்தில் 2001 ஆண்டு யூலை மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது!